**தலாவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலாவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமைமாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்தஅறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் பந்தி இலக்கம் 1.6 ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர்த்து, இவ்வறிக்கையானது 2020 திசெம்பர் 31 ல் தலாவ பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் குறித்த திகதியுடன் முடிவடையும் அவ்வருடத்துக்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதிச் சுழற்சி தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்காய்வுச் நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயமறுப்பிற்கானஅடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்புக்கள், கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்தினை உறுதிப்படுத்த கணக்காய்வின் போது நான் பெற்றுக்கொண்ட ஆதாரங்கள் போதுமானது, பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் அதனோடு தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவகையிலான உள்ளக பரிபாலன தீர்மானங்களை மேற்கொள்ளல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேசசபையின் நிதி அறிக்கையிடல் சம்பந்தமான வகைகூறல் ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேசசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சாத்தியமயனவகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற தவறான விளக்கங்கள் அற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்றபோதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் உண்மைகளை மாத்திரமே வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதம் காணப்படுவதில்லை. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பிழைகள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களினைப் பொறுத்து அதன் தாக்கம் தங்கியிருக்கின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் இக் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடனேயே செயற்பட்டேன் மேலும் என்னால்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடுசெய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களைவிட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதற்கு தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் என்பன காரணமாகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கம் இல்லாதபோதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுகொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடுசெய்யப்பட்டது.

இயலுமானவரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கென கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேசசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனதுஅதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(இ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினதும் 1.6.2 மற்றும் 1.6.3 ஆம் பந்திகள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று வீதவரி அறவீட்டு பதிவுகள் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வீதவரி பாக்கி ரூபா 17,249,886 என குறிப்பிடப்பட்டிருந்த அதேவேளை நிதிக்கூற்றுக்களில் அதில் ரூபா 29,151 குறைவாக ரூபா 17,220,735 எனக் குறிப்பிடிப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான வீதவரி நிலுவை தொகை குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | பேரேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று திட்டிய மேலதிகம் ரூபா 469,081,516 ஆக காணப்பட்ட அதேவேளை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் அத்தொகை ரூபா 540,548,759 என கணக்கீடு | ஏற்றுக் கொள்கிறேன். | நிதி நிலைமை கூற்றுகளில் உரிமைப் பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டதனால் ரூபா 71,467,243 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 8 வகையான சொத்துக்களின் இனங்காணப்பட்ட மீள் மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 71,467,244 ஐ குறைத்து பதிவு செய்தமையால் திரட்டு நிதியின் பெறுமதி அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | மீள் மதிப்பீட்டின் சரியான பெறுமதி நிதிநிலை கூற்றகளில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ம் திகதியன்று தயாரிக்கப்பட்ட நிதிப்பாய்சல் கூற்றின் பிரகாரம் பணம் மற்றும் பணம்சார் சொத்துக்களின் நிகர அதிகரிப்பு, ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட காசு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,830,827 ஆக காணப்பட்ட போதும் கணக்கறிக்கையில் ரூபா 13,150,483 என ரூபா 14,680,344 ஐ குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | பணம் மற்றும் பணம்சார் சொத்துக்களின் சரியான தொகை நிதிநிலை கூற்றுகளில் குறிப்பிடப்படவேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சபையினால் அல்லது பிற வெளி நிறுவனங்களினால் எவ்வித பாதைகள், பாலங்கள் மற்றும் மதகுகள் நிர்மாணிக்கப்படாத நிலையில் பாதைகள், பாலங்கள் மற்றும் மதகுகள் நிர்மாண செலவாக ரூபா. 112,003,925 பதிவு செய்யப்பட்டிருந்தமையால் சபையின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறித்த தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிகூற்றுகளில் அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அடையாளங் காணப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதப் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியத் தொகை ரூபா 2,016,957 ஆனது செலுத்தப்பட வேண்டிய தொகையாக அடையாளங்காணப்பட்டு பதிவு செய்யப்படாமை காரணமாக சபையின் நடைமுறைப் | 2021 ஆம் ஆண்டின் நிதிகூற்றுகளில் அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பேன். | செலுத்தப்படவேண்டிய தொகையானது நடைமுறைப் பொறுப்புக்களாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் அதன் பெறுமதியைவிடக் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) மூலம் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டமொன்றின் ஒப்பந்தக்காரருக்கு தொடக்க வேலைகளுக்கென மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட முட்பணம் ரூபா 1,863,030 ஆனது புணர்நிர்மாணச் செலவாகக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் மீண்டெலும் செலவினம் அத்தொகையால் அதிகரித்திருந்ததோடு நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையால் குறைந்திருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் | தொடக்க வேலைகளுக்கென வழங்கப்படும் முட்பணக் கொடுப்பனவுகள் நடைமுறைச் சொத்துக்களாக பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் | செலுத்தவேண்டிய கட்டணம் மதிப்பீட்டின் அடிப்படையில் அல்லது கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (ஐ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று மீள் அறவிடவேண்டிய ஊழியர்கடன் நிலுவை தொகை ரூபா. 7,741,395 ஆக காணப்பட்ட போதிலும் நிதிகூற்றுகளில் அதுரூபா. 6,565,608 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா. 1,175,787 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன் | சரியான கடன் தொகையின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 **இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய அட்டவணை மீதிகளுக்கு இடையே ரூபா 1,243,565 ஆன | ஏற்றுக் கொள்கின்றேன் | அட்டவணைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பெறுமதியோடு ஒத்துக் காணப்படல் வேண்டும். |

வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 வகையான கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 8,533,622 பெறுமதிகளுக்குரிய கணக்காய்விற்கு அவசியமான தகவல்கள் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | வடமத்திய மாகாண ஆளுனரின் 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 2086/15 ஆம் இலக்க வர்த்தமானியின் 5 ஆம் பிரிவு | 2019 ஒக்தோபர், நவம்பர், திசெம்பர் மாதங்களில் மேலதிகக் கொடுப்பனவாக தவிசாளருக்கு ரூபா 700 வீதம் 17 நாட்களுக்கு இணைந்த படிகள் வழங்கப்பட்டமையினால் ரூபா 11,900 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | ஆராயப்பட்டு எதிர்காலத்தில் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பேன். | கூடுதல் கட்டணத்தை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xiv அத்தியாயத்தின் 4.1 ம் பிரிவு | இரு பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அவர்கள் பயணம் செய்த 750 மீற்றறுக்காக 2018 ஜனவரி முதல் 2020 செப்டம்பர் வரை இணைந்த படிகள்,பிரயாணச் செலவாக ரூபா 170,407 வழங்கப்பட்டுள்ளது. | ஆராய்ந்து உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பேன். | தாபனவிதிக் கோவைப் பிரகாரம் செயற்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிஞ்சிய மீண்டெலும் செலவினம் ரூபா 57,052,501 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,570,537 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரித்தலின் செயளாற்றல்**

| கணக்காய்வுஅவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| 2020 திசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வீதவரித் தொயையான ரூபா 17,220,735 அறவீடு செய்யப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் | மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரைரூபா 917,097 பெறுமதியான வாடகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீடுசெய்யநடவடிக்கை எடுப்பேன் | நிலுவை வாடகைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரைரூபா 174,500 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவீடுசெய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீடுசெய்யநடவடிக்கை எடுப்பேன் | விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டுமீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

3.1 **இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 6,390,000 பெறுமதியான கெப் வண்டி 2019 ஏப்ரல் மாதம் 15 ம் திகதி விபத்துக்குள்ளாகியமையினால் ரூபா 3,400,520 இழப்பு ஏற்பட்டிருந்தது. எனினும் விபத்து தொடர்பான நம்பகத்தன்மை குறைபாடு மற்றும் வாகனத்தை தவறாக பயன்படுத்தியமை போன்ற காரணிகளினால் காப்பீட்டுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ளூர் முகவரின் பழுதுபார்க்கும் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட விசாரனையின் அறிக்கைக்கு ஏற்ப செயற்படுவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | இழப்பை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு ரூபா 1,040,735 என்ற உச்ச கேள்வித் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட 04 வியபார நிலையங்கள் மீளாய்வாண்டில் உச்ச கேள்வித் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்படாது குறைந்த கேள்வித் தொகையான ரூபா 924,078 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | பெற்றுக் கொள்ளக் கூடிய உயர்ந்தபட்ச குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கரகஹவெவ கழிவகற்றல் நிலைய நிர்மாணிப்புக்கென 2012 முதல் 2017 வரையான காலப்பகுதியில் மத்திய சுற்றாடல் அதிகார சயினால் சபைக்கு ரூபா 3,446,848 பணம் கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் அதில் ரூபா 1,121,026 செலவிடப்பட்டிருந்தது. எனினும் குறித்த கழிவகற்றல் நிலைய நிர்மாணப் பணிகள் நிறைவுறாமையினால் அதன்மூலம் எதிர்பார்த்த பலனை அடைய முடியவில்லை. | ஒருகலயாய கழிவகற்றல் நிலையம் சபையின் நிரந்தர கழிவகற்றல் நிலையமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | கரகஹவெவ கழிவகற்றல் நிலையத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டு சபையினால் வழங்கப்பட்ட 65 பற்றுச்சீட்டுக்களுக்கென பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 371,946 பணம் சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படாமை தொடர்பில் பொறுப்பானவர்களிடமிருந்து குறித்த தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | விசாரனைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு குறித்த தொகையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |